Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily    மக்கள் தினசரி

நாதம் 03    திருவள்ளுவர் ஆண்டு 2024    தை 20    (02-02-1993) செவ்வாய்க்கிழமை    ஓசை 850

## வெளிநாட்டு தபாலில்வந்த 2லட்சம்டாலர் அபகரிப்பு

வடபகுதிக்கான ஆயிரக்கணக்கான கடிதங்கள் உடைக்கப்பட்டுப் பரிசோதிக்கப்பட்ட போது அவற்றினுள் இருந்த சுமார் இரண்டுலட்சம் அமெரிக்க டாலர் [80 லட்சம் ரூபா] அரசாங்கத்தினால் அபகரிக்கப்பட்டு திறைசேரியில வைப்பிலிடப்பட்டுள்ளதாக தெரியவருகிறது கடந்த சில மாதங்களாக யாழ் குடாநாட்டிற்கும் வட - கிழக்கின் ஏனைய சில பகுதிகளுக்கும் வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் கடிதங்கள் கொழும்பில் உடைக்கப்பட்டுப் பரிசீலிக்கப்படு (5-ம் பக்கம் பார்க்க)

# எழுதுமட்டுவாள், கிளாலிப் பகுதியில் விமானக் குண்டுவீச்சுத் தாக்குதல்

## அகோர எறிகணை வீச்சு; ஒரு பெண் பலி; பலர் காயம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சியில் எழுதுமட்டுவாள், கிளாலி ஆகிய பகுதிகள் மீது நேற்றுக் காலை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்ட அதேவேளை, ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து இப்பகுதியின் மீது பலத்த எறிகணைத் தாக்குதல்களும் நடத்தப்பட்டன. இத் தாக்குதல்களில் ஒருவர் கொல்லப்பட்டார்; பலர் படுகாயமடைந்தனர்.

எழுதுமட்டுவாள் பகுதி பொதுமக்களின் வாழ்விடங்களை குறியாகக் கொண்டு சிறிலங்கா விமானப்படையின் புதியரக குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய குண்டுத் தாக்குதல்களினாலும் எறிகணைத்தாக்குதல் மற்றும் றொக்கற் தாக்குதல்களினாலும் இளம் பெண் ஒருவர் பலியானதுடன் ஒன்பது பேர்வரை படுகாயமடைந்தனர்.

நேற்றுக் காலை 5. 45 மணியளவில் எழுதுமட்டுவாள் தெற்கு ஒட்டுவெளி பகுதியை வட்டமிட்ட இரண்டு சிறிலங்கா விமானப்படையின் குண்டுவீச்சு விமானங்கள் அங்கு நான்கு குண்டுகளை வீசின. இதனால் ஒரே குடும் [5ஆம் பக்கம் பார்க்க]

## உடலின் பல பகுதிகளூடாக சன்னங்கள் துளைத்தன

### குண்டு வீச்சில் காயமடைந்தவர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

அதிகாலைவேளை திடீரென விரைந்துவந்த விமானங்களில் ஒன்று நிலத்தை நோக்கி விரைவாக வருவதைக் கண்டதும் நாங்கள் எல்லோரும் முற்றத்தில் வீழ்ந்து படுத்தோம். மாமரத்தில் வீழ்ந்து வெடித்த குண்டின் சிதறல்கள் எனது உடலைத் துளைத்துச் சென்றன.

நேற்றுக் காலை 5. 45 மணியளவில் எழுதுமட்டுவாள் தெற்கு ஒட்டுவெளிப் பகுதி மக்கள் வாழ்விடங்கள் மீது சிறிலங்கா குண்டுவீச்சு விமானங்கள் நடத்திய அகோர குண்டு வீச்சுத் தாக்குதலுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் இராசையா யோகேஸ்வரி (வயது 25) என்ற இளம்பெண் நமது நிருபரிடம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நேற்று நடைபெற்ற குண்டு வீச்சு சம்பவம் பற்றி அவர் மேலும் விபரிக்கையில்:

நேற்று அதிகாலை 5. 45 மணியளவில் நான் எழுந்து காலைக் கடன்களுக்காக (6 ஆம் பக்கம் பார்க்க)

## "குண்டுவீச்சில் பாதுகாத்து எறிகணைக்கு பறிகொடுத்தேன்"

### மகளை இழந்தவர் தெரிவிப்பு

(நமது நிருபர்)

குண்டுவீச்சு விமானங்களின் தாக்குதலிலிருந்து நூலிழையில் தப்பி எறிகணைத் தாக்குதலுக்கு எனது மகளை பறிகொடுத்துவிட்டேன் என நேற்று எழுதுமட்டுவாள் பகுதியில் நடைபெற்ற எறிகணைத் தாக்குதலினால் படுகாயமடைந்த கந்தசாமி என்ற குடும்பஸ்தர் கண்ணீர் மல்க நமது நிருபரிடம் வேதனையுடன் கூறினார்.

மேற்படி சம்பவத்தில் இவரது ஒருமகள் பலியானதுடன் மனைவியும் மற்றிரு பிள்ளைகளும்காயமடைந்தது குறிப்பிடத்தக்கது.

இக் குண்டுவீச்சு சம்பவங்கள் பற்றி அவர் விளக்குகையில்; நேற்று அதிகாலை விமானங்களின் சத்தங்கள் அண்மையாகக் கேட்டதும் உறங்கிக் கொண்டிருந்த நாங்கள் எழுந்து வீட்டுக்கு வெளியே வந்தோம். விமானங்கள் எமது பகுதியை சுற்றியதுடன் அண்மையாக குண்டுகளை வீசியது.

இதனால் பாதுகாப்புக்கருதி அருகிலிருந்த வயலுக்குள் சென்று பதுங்கிக் கொண்டோம். சுமார் இருபது நிமிடங்களில் குண்டுகளை வீசிவிட்டு விமானங்கள் திரும்பிச் சென்றதும் நாம் வீட்டிற்கு திரும்பி வந்தோம்.

வீட்டுவாசலை அண்மித்ததும் திடீரெனவந்த எறிகணை ஒன்று எமக்கு மிக அருகில் [6ஆம் பக்கம் பார்க்க]

வடமராட்சி கிழக்கில்

## குடியிருப்புகள் மீது பலத்த ஷெல் வீச்சு

[வடமராட்சி]

வடமராட்சி கிழக்குப் பகுதியில் வெற்றிலைக் கேணி, கட்டைக்காடு சிறிலங்கா இராணுவ நிலைகளிலிருந்து செம்பியன்பற்று, தாளையடிப் பகுதிக் குடியிருப்புக்களை நோக்கி இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதலை மேற்கொண்டனர்.

இச்சம்பவம் நேற்று அதி [5ஆம் பக்கம் பார்க்க]

வவுனியா பகுதியில்

## 400 குடும்பங்கள் படையிடம் சிக்கின

(கொழும்பு)

வவுனியாவிற்குமேற்கே சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று மேற்கொண்ட நடவடிக்கையின் போது சுமார் 400 குடும்பங்கள் இராணுவத்தின் பிடியில் சிக்கியுள்ளதாக தெரியவருகிறது.

நேற்று இரண்டாவது நாளாக இடம்பெற்ற இவ் இராணுவ நடவடிக்கையில் 3000 படையினர் ஈடுபட்டதாகவும் உலங்கு வானூர்திகளும் விமானங்களும் தாக்குதலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுடன் ( 5 ஆம் பக்கம் பார்க்க)

## சங்குப்பிட்டி பாதைதிறக்க கூட்டுப்படை தயாராம்

### படை வாபஸ்பற்றி தகவலில்லை

(கொழும்பு)

குடாநாட்டுக்கான போக்குவரத்துக்காக ஆனையிறவு தவிர்ந்த மாற்றுப்பாதை ஒன்றை வழங்குவதற்கு கூட்டுப்படை தலைமை அலுவலகம் தீர்மானித்துள்ளது.

இவ் அலுவலகம் விடுத்த அறிக்கை ஒன்றில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர் ஸ்தானிகர் அலுவலகம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றின் ஒத்துழைப்பை கூட்டுப்படைத் தலைமை அலுவலகம் நாடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது சங்குப்பிட்டிப் பாதையைத் திறந்து விடுவது பற்றியும் ஆராயப்படுவதாக தெரிய வருகிறது.

இதேவேளை, பூநகரிப் பாதை திறப்பது பற்றி அறிவித்துள்ள சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் அப்பகுதியில் உள்ள இராணுவம் வாபஸ் ஆவது பற்றி தகவல் ஏதும் வெளியிடவில்லை.

## வவுனியாவில் காவலரண் மீது தாக்குதல்

[கொழும்பு)

வவுனியா மாவட்டத்தில் உள்ள வீரவிக்கும்புர என்ற பகுதியில் அமைந்திருக்கும் சிறிலங்கா' இராணுவக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதல் நடாத்தியுள்ளனர். என இராணுவவட்டாரங்கள் தெரிவித்தன. இத்தாக்குதலில் ஏற்பட்ட சேதவிபரம் [தெரியவரவில்லை.

இனப்பிரச்சினைக்கு தீர்வு

## அமெரிக்க கறுப்பு இன சட்டத்தரணி முயற்சி

வடக்குக் கிழக்கு பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக சிறிலங்கா அரசிற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பேச்சு வார்த்தையில் ஈடுபடுவதற்கு அமெரிக்க கறுப்பின சட்டத்தரணியான டாக்டர் காலில் அல் மன்சூர் முன்வந்துள்ளார்.

## மீட்பு நிதி சேகரிப்பு

நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்தில் நாளை புதன்கிழமை பிற்பகல் 3-00 மணி தொடக்கம் 3 30 மணி வரையும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் 10 00 மணி வரையும் மீட்புநிதி சேகரிக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுவரை மீட்புநிதி செலுத்தத் தவறியோர் இக்குறித்த நாட்களில் தமது மீட்புநிதிக் கடனைச் செலுத்த முடியும் என தமிழீழ மீட்புநிதிப் பொறுப்பாளர் வெற்றியரசன் அறிவித்துள்ளார்.

## உணவுப் பொருள் விநியோகம்

சகல யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலும் 'அ'. 'உ' குடும்ப அட்டை உரியவர்களுக்கு, அட்டை ஒன்றிற்கு ஒரு கிலோ சீனி. 5 கிலோ மா, 5 கிலோ அரிசி இன்று முதல் வழங்கப்படவுள்ளன.

சீனி கிலோ 31 ரூபா, மா கிலோ 17 ரூபா, அரிசி கிலோ ரூபா 21. 50 சதத்துக்கு விற்கப்படவுள்ளன.

# வரி விளம்பரம்

### கலண்டர்கள் விற்பனைக்குண்டு

விழறுமுடிக்கும நோககுடன் திருவள்ளுவர் நாட்காட்டி மற்றும் 3 அளவுகளில் படக் கலண்டர்கள் மலிவுவிலையில் பெற்றுக்கொள்ளலாம் 48 மணிநேரத்தில் தங்கள் விலாசம் பதிப்பித்துக் கொடுக்கப்படும். ஸ்ரீ காந்தா அச்சகம்-புத்தகசாலை, 330, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (4173)

### டில்கா வாச் & றேடியோ வேக்ஸ்

உங்கள் கடிகாரங்கள், றேடியோக்களை உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள எம்மை நாடுங்கள். (சகல கடிகார பற்றிகளும் எம்மிடம் உண்டு). தரமான கடிகாரங்கள், றேடியோக்கள் நியாய விலைக்கு விற்றுத் தரப்படும் DILKA WATCH & RADIO WORKS 284, ஸ்ரான்லி வீதி, (வான்வில் கூல்பார் அருகில்) யாழ்ப்பாணம். கிளை: இலங்கை வங்கி அருகாமையில் சாவகச்சேரி (சி-5795)

### தேவை

யாழ்நகரிலோ அல்லது சுற்றாடலிலோ ஸ்ரூடியோ நிறுவுவதற்கு தகுந்த வீடு வாடகைக்கு தேவை. தொடர்பு இல 202, கோவில் வீதி நல்லூர் (கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக) (4199)

### பற் சிகிச்சை நிலையம்

கொக்குவில்/இந்து கல்லூரிக்கு எதிரில் கே.கே. எஸ் வீதி கொக்குவில். பா.நே தினசரி 4 பி.ப.- 6 பி.ப, ஞாயிறு: 10மு.ப - 12 ந.ப (4056)

### தேவை

ஓவிய வகுப்புக்களும், ஓவிய கூடமும் அமைப்பதற்கேற்ற வீடு யாழ். சுற்றாடலில் வாடகைக்கு தேவை. தொடர்பு இல: 202, கோவில் வீதி, நல்லூர். (கைலாசபிள்ளையார் கோவில் முன்பாக) (4200)

**DAY CLASSES**

விஞ்ஞானப் பிரிவு

ஆரம்பம்:-
0? -02-93, 8 மணி

பிரத்தியேக

புதிய

**சயன்ஸ் சென்ரர்**

(சி-5962)

### சங்கம் பகிஷ்கரிப்பு

மட்டக்களப்பு பிரதேச கல்வித்திணைக்கள வருடாந்த ஆசிரியர் இடமாற்ற சபைக் கூட்டத்தை இச்சபையின் தொழிற்சங்க உறுப்பினரான அகில இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் வி. த. குமாரசாமி பகிஷ்கரித்துள்ளார்.

சுமார் இரண்டுவருட காலமாக நடைபெறாமலிருந்த மேற்படி இடமாற்றசபையின் கூட்டம் அண்மையில் மட்டக்களப்புக் கல்விப் பணிப்பாளரினால் கூட்டப்பட்டது. எனினும் இப்பகிஷ்கரிப்பினால் கூட்டம் நடைபெறவில்லை.

Spoken English
with Grammar
BY
BRITTO

புதிய பிரிவுகள்

★ DAY CLASS
Thu + Friday 8 - 9
ஆரம்பம்: 4 2 93

★ Weekend Class
Sat + Sunday 1 - 2
ஆரம்பம்: 6. 2. 93

**புதிய உயர் கல்லூரி**
NEW COLLEGE OF HIGH STUDIES
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.
(சி-5919)

## உலர் உணவு விநியோகம்

(யாழ்ப்பாணம்)

முகாம்களுக்கான உலர் உணவு விநியோகம் தொடர்பான தீர்மானத்திற்கு அமைய யாழ். புகையிரத நிலைய முகாமுக்கான விநியோகம் புங்குடுதீவு பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இவ் விநியோக ஒழுங்கு முறைக்காக 1993 தை மாத உலர் உணவு விநியோகித்த பின் மக்களிடமிருந்து உலர் உணவு அட்டைகளைப் பெற்று ஊர்காவற்றுறை, வேலணை பிரதேச செயலர்களிடம் ஒப்படைக்குமாறு வேலணை பிரதேச செயலர் மேற்படி சங்கத்திற்கு அறிவித்துள்ளார். (22)

## நினைவு கூருகின்றோம்..

**1993-2-2**

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் மட்டு - சஞ்சி குடிச்சாற்றுப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டின் பின் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

ஞானி [செல்லத்துரை பாக்கியநாதன் - பாடசாலை வீதி, திராய்க்கேணி - அம்பாறை]

1989 ஆம் ஆண்டு வவுனியா - கொம்புவைத்தகுளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ஜெரி [புவனகாந்தன் பேரின்பநாதன் - 8-ம் வட்டாரம் சாம்பல்தீவு - திருமலை]

செட்டி [துரைராஜா ரமேஷ்பாபு - வேப்பங்குளம் - வவுனியா]

மன்னார் - கட்டையடம்பன் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

சேகர் [ஞானசம்பந்தர் சின்னத்தம்பி - பாலம்பிட்டி, மடுக்கோவில் - மன்னார்]

லெப். ரூபன் [சந்தையா கந்தசாமி - 1-ம் வட்டாரம், மண்டைதீவு - யாழ்]

யாழ். பல்கலைக்கழக வளாகச் சந்தியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட - நாட்டுப் பற்றாளர்களான -

தனபாலசிங்கம் சத்தியேந்திரா
(யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவன்)

சின்னத்தம்பி ஜெகநாதன்
(யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவன்)

முல்லை. ஒட்டிசுட்டான் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு திருமலை - மூதூர், இலக்கந்தைப் பகுதியில் எதிர்பாராத விதமாக எமது மிதிவெடியில் சிக்கிய நிலையில் சயனைட் உட்கொண்டதில் எமைப் பிரிந்த -

2-ம் லெப். பரம் [வேலாயுதம் மோகனதேவன் - முட்டுச்சேனை, வெருகல், மூதூர் - திருமலை]

யாழ் - மாவிட்டபுரம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

வாமதேவன் [இராசலிங்கம் ஜெய்சங்கர் - தட்சணாமருதமடு, மடுக்கோவில் - மன்னார்]

சந்திரன் (சின்னையா குணசேகரம் பாரதிபுரம் மேற்கு-- கிளிநொச்சி)

செந்தில் (செல்லப்பா சுரேஷ்குமார் - தஞ்சிட்டி, அளவெட்டி வடக்கு - யாழ்)

கிளிநொச்சி - ஆனையிறவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

பிரகாஷ் (குணநாயகம் கேதீஸ்வரன் - 22, வன்னேரிக்குளம் - கிளிநொச்சி)

1992 ஆம் ஆண்டு அம்பாறை - சவளக்கடைப் பகுதியில் சிறிலங்கா ஊர்காவற் படையினரின் காவலரண் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது வீரச்சாவெய்திய -

சதாநேசன்—யூலி (பாப்பாக்குட்டி தவராசா - சேனைக்குடியிருப்பு - 02 - மட்டு.)

மட்டு -அம்பிளாந்துறைப் பகுதியைச் சுற்றிவளைத்த சிறிலங்கா இராணுவத்தினர் மற்றும், தேசவிரோதக் குழுவினரால் சித்திரவதை செய்யப்பட்டுச், சுட்டுக் கொல்லப்பட்ட 4 தமிழிளைஞர்கள்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி-5917)

# திருமண அழைப்பு

காலம்: ஆங்கிரச தைத்திங்கள் 21ஆம் திகதி [03-02-1993]
புதன்கிழமை காலை 9.00 - 10.35 வரையுள்ள சுபவேளை.
இடம்: பரராஜசேகரப் பிள்ளையார் கோவில், இணுவில்.


**மணமகன்:**

அளவையூர் லயஞான குபேரபூபதி
திரு. V. தெட்சணாமூர்த்தி தம்பதிகளின் தவப்புதல்வன்
திருநிறை செல்வன் **T. உதயசங்கர்** அவர்களுக்கும்

**மணமகள்:**

அளவையூர் திரு. குமாரசாமி தம்பதிகளின் தவப்புதல்வி
திருநிறை செல்வி **ரஞ்சனா** அவர்களுக்கும்

திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அவ்வமயம் அனைத்துத் தமிழீழ மக்களும் சுற்றஞ்சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்தி ஏகுமாறு அன்புடன் அழைக்கிறோம்.



தவில்மேதை தெட்சணாமூர்த்தி

❋ மணமகன் இல்ல வரவேற்பு:
மணவிழா நிறைவைத் தொடர்ந்து இணுவில் மத்திய கல்லூரிக்கு அருகில் 3 தினங்கள் - மணமகன் இல்லத்தில்

❋ மணமகள் இல்ல வரவேற்பு:
சனிக்கிழமை பிற்பகல் 4, 00 மணி

(தனிப்பட்ட அழைப்புகள் இல்லை)

அன்புடன்

மணமகனுக்காக,
ஐ. கணேசன் தம்பதியர்
யார்க்கரு, சரவெட்டி. [சி-4202]

மணமகளுக்காக
திரு. குமாரசாமி தம்பதியர்
இணுவில்.

சம்பளம் வழங்கப்படாமையால்

# ஆடைத் தொழிற்சாலையில் ஊழியர் வேலை நிறுத்தம்

(காலி)

காலியில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலையில் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள 200 தொழிலாளர்களில் 29 பேர் பெண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது

தொழிற்சாலை நிர்வாகம் பெண்தொழிலாளர்களை மலசல கூடங்களைச் சுத்தம் செய்யப் பணித்தமை மற்றும் உரிய நேரத்தில் சம்பளம் வழங்கத் தவறியமை ஆகிய காரணங்களுக்காகவே தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்து வருகின்றனர். வேலை நிறுத்தம் ஜனவரி 18ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறுகிறது.

# மத்தியகிழக்கில் ஆசியநாட்டு பணிப்பெண்கள் சித்திரவதை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஆசிய நாடுகளில் இருந்து வீட்டுப்பணிப் பெண்களாக செல்வோர் அவரவர் வேலைக்கமர்த்தப்படும் வீட்டு எஜமானர்களின் பல்வேறு சித்திரவதைகளுக்கு உள்ளாக வேண்டியுள்ளது.

இவ்வாறு சித்திரவதைக்குள்ளாகிய பணிப்பெண்கள் அங்கிருந்து தப்பிவந்து தங்களது நாடுகளின் தூதரகங்களில் தஞ்சமடைவதாக தெரியவருகின்றது.

இவர்களில் பெரும்பாலானோர் இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். அண்மையில் குவைத்தில் உள்ள 267 பிலிப்பைன்ஸ் பணிப்பெண்கள் தங்களுக்கு சம்பளம் தரவில்லை, அடித்து துன்புறுத்தப்பட்டோம், பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டோமென்றுகூறி அங்குள்ள பிலிப்பைன்ஸ் தூதரகத்தினில் புகுந்துள்ளனர். இவர்களில் அரைவாசிப் பேர் நாடு திரும்ப விரும்புகின்றனர் ஏனையோர் வேறு இடங்களில் தொழில் தேடுகின்றனர்என தெரிவிக்கப்படுகின்றது குவைத்தில்மட்டும் ஒரு லட்சம் ஆசியப் பெண்கள் வேலை செய்கின்றனர். இப்பணிப் பெண்களின் பாதுகாப்புக் கானசட்டம்கொண்டுவரப்பட வேண்டும் என பாராளுமன்றத்தில் மனித உரிமைகள் குழு உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மேலும் இலங்கை, பங்களாதேஷ் இந்தியா ஆகியவற்றின் தூதரகங்களில் இருந்தும் இதே போன்ற குற்றச்சாட்டுக்களே கிடைத்துள்ளன.

மணிக்கூட்டு கோபுரங்களுக்கு

# 120 மில்.ரூபா ஒதுக்கும் அரசு 80 மில்.சம்பளம் தந்தால் என்ன?

-பேராசிரியர் நளின் டி சில்வா

(கொழும்பு)

மணிக்கூட்டுக் கோபுரங்களைக் கட்டுவதற்காக நூற்றிருபது மில்லியன் ரூபாய்களை ஒதுக்க அரசாங்கத்திற்கு இயலுமாக இருந்தால் பல்கலைக்கழக ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பிற்காக எண்பது மில்லியன் ரூபாய்களை ஏன் ஒதுக்க முடியாது என்று பேராசிரியர் நளின் டி சில்வா கேள்வி எழுப்பியுள்ளார்.

கண்டியில் அண்மையில் 'இலவசக்கல்வி' என்னும் தலைப்பிலான கருத்தரங்கு ஒன்றில் கலந்து கொண்டு பேசிய பேராசிரியர் மேலும் கூறுகையில், ஐம்பது ஆண்டுகளாக அமுல்படுத்தப்பட்டு வரும் இலவசக்கல்வி முறையை இல்லாதொழிக்க அரசு முற்படுவதாகவும் குற்றம் சாட்டினார்.

இதேவேளை கடந்த ஒரு மாதமாக தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பல்கலைக்கழக ஆசிரியர்கள் தமது போராட்டத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சியாக ஜனாதிபதியுடன் பேச்சுவார்த்தை நடத்த முற்பட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

# படைப்புக்கள் உருவாவதற்கு ஏதுவான காலம் இதுதான்

- செம்பியன் செல்வன்

(யாழ்ப்பாணம்)

எழுதுவதற்கு ஏற்ற காலமும், சூழலும் இதுதான் உன்னதமானதும் உயிர்த்துடிப்பு மிக்கதுமான படைப்புக்களை இக் காலத்தில்தான் படைக்க முடியும். இவ்வாறு எழுத்தாளர் திரு. செம்பியன் செல்வன் தெரிவித்தார்.

சாளரம் சஞ்சிகை நடத்திய சிறுகதை எழுதுதல் கருத்தரங்கில் கலந்துகொண்டு கருத்துரைவழங்குகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். கடந்த வெள்ளியன்று புனித சாள்ஸ் மகாவித்தியாலயத்தில் இக்கருத்தரங்கு இடம் பெற்றது.

# இலவச சீருடைத் துணி ஆசிரியருக்கும் வழங்குக

பொதுஜன அமைப்புக்கள் கோரிக்கை

(கொழும்பு)

இவ்வருடம் அரசாங்கம் நடைமுறைப் படுத்திய மாணவர்களுக்கான இலவச சீருடை விநியோகம் போன்று ஆசிரியர்களுக்கும் இலவச சீருடை முறை ஒன்றை அறிமுகம் செய்யவேண்டுமென்ற கோரிக்கையை அம்பாறை மாவட்டத்திலஉள்ள பல்வேறுபொது அமைப்புக்கள் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் கவனத்திற்கு கொண்டுவந்துள்ளன.

இக்கோரிக்கை சம்பந்தமாக மேலும் தெரியவருவதாவது: மாணவர்களுக்கு வழிகாட்ட வேண்டிய ஆசிரியர்கள் பாடசாலைக்கு வரும்போது அணிந்து வரும் உடைகளைக் கவனிக்கும்போது கவலை அடைய வேண்டி இருக்கின்றது. ஆசிரியர்கள் ஒழுங்கான முறையில் ஆடை அணியவேண்டும். அப்போதுதான் மாணவர்கள் சீருடையைப் பயன்படுத்துவதற்கு வசதியாக இருக்கும் என தெரிவித்துள்ளனர். மேலும் அம்பாறை மாவட்டத்தில் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட சீருடைப் பொதிகளை அனேகமான பெற்றோர் கடைகளில் விற்றுவிட்டு அப்பணத்தைக்கொண்டு வேறு பொருள்களை வாங்குவதில் கவனம் செலுத்துகின்றனர். எனவே பாடசாலைகளிலேயே தையல்காரர்களை வைத்து மாணவர்களுக்கான சீருடைகளை தைத்து வழங்க நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் பல தையல்காரர்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்கமுடியும்.

## 90-ம் நாள் நினைவஞ்சலி



2-ம் லெப்டினனட் குகன் / நில்டன்
(சிதம்பரப்பிள்ளை இந்திரகுமார்)


3-02-1993 புதன்கிழமை பிற்பகல் நினைவஞ்சலிக் கூட்டமும், உருவப்படத் திரைநீக்கமும் நடைபெறும். இவ்வைபவத்தில் போராளிகள், அயலவர்கள் அனைவரும் வந்து சிறப்பித்து வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பெற்றோர்,
சகோதரர்கள்.

சிதம்பரப்பிள்ளைக்குருக்கள்
மிந்திரன் அம்மன் கோவில் பூசகரும்.
ஆதீனமும்.

துன்னாலை (4151)

## 31-ம் நாள் நினைவுச் சுடரும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**இராமசாமி மருதையா**
(அஜினா கிறைண்டிங் மில் உரிமையாளர்)

தாயின் மடியில் 27-8-1943 — தாயக மண்ணில் 3 1 1993

பாசத்தின் சிகரமே - எம் பாதைக்கு ஆசானே
பண்பே உருவமாய்ப் பலரோடும் பழகினீர்கள்
அன்பெனும் ஊற்றினில் அமிழ்த்தி எங்களை வளர்த்தீர்கள்
அனைவரும் அழுதிட அணைந்தீர்கள் மார்கழி தீபமதில்
எமதாருயிர்த் தெய்வமே இனி எப்போது உங்களைக் காண்போம்.

உங்கள் ஆத்மாவின் சாந்திக்குத் தினமும் இறைவனை வேண்டுகின்றோம்.

இன்று 2-2-93 (செவ்வாய்க்கிழமை) நண்பகல் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள அந்தியேட்டிக் கிரியையில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

உம்பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

நீர்வேலி தெற்கு
நீர்வேலி
(4190)



## குருநகர்புதுமை(காணிக்கை)மாதா தேவாலய மகோற்சவ திருநாட்கள்

2. 2. 1993 மாலை 5. 00 மணி - திருப்பலி பூசை,
" " 5. 30 மணி - நற்கருணை ஆராதனை
" " 6. 30 மணி நற்கருணை சுற்றுப்பிரகாரம்
3. 2. 1993 அதிகாலை 5. 30 மணி - முதலாம் பூசை
" காலை 6. 30 மணி - திருநாட் திருப்பலி

யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை கலந்து கொள்ளும் திருநாள் பாடல் கூட்டுத் திருப்பலி. அதனைத் தொடர்ந்து திருச்சொரூப சுற்றுப் பிரகாரம் நடைபெறும்.


பங்குத் தந்தை
வண- பி- எம். இம்மானுவேல்

அன்பளிப்பு:

| | |
|---|---|
| ஒளி இல்லம்<br>210. பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம். | நியூ வசந்தா ஸ்ரோர்ஸ்<br>130, பாங்ஷால் வீதி,<br>குருநகர். |
| மொறாயஸ்<br>50. வெலிங்டன் சந்தி,<br>யாழ்ப்பாணம். | பி. ஐ. பர்னாண்டோ<br>542, ஆஸ்பத்திரி வீதி,<br>(அரசினர் வைத்தியசாலை முன்)<br>யாழ்ப்பாணம். (சி/5923) |

## 90-ம் நாள் நினைவு தினம்

மனிதனாய்
02
—
02
—
1974



மாவீரனாய்
02
—
11
—
1992

### 2-ம்லெப். இமையவன் (குட்டி)

[முத்துக்குமாரு யோகேஸ்வரன்]

ஐயிரு திங்கள் நொந்து அவனியில் பெரும் பேறாக
மெய்யுறு மகனுமாகி மேதினி போற்ற ஓங்கி
வையகத்துத் தமிழர் தம்மை இமைபோலக் காக்க எண்ணி
இமையவன் என்னும் நாமம் சூட்டியதும்
கடுக்காய்த் தீவினைக் கவர்ந்து நின்ற கூலியாளனை
கண்டு கலங்காமல் களிப்புடன் உன்னித்து
கார்த்திகை மாதத்துக் கடும் மழை நேரத்திலே
காலடி எடுத்து வைத்தாய் கர்ச்சிப்புடன்
நிமிர்ந்து நின்று நிலையாய் எதிர்த்தாய் - எதிரி
நிலை தடுமாறி நிர்க்கதியாய் மடிந்தான் - நீ
நிமிடம் மணியாகி மாறிய பின்னே
தமிழீழ மண்ணில் நிம்மதியாக நித்திரை கொண்டாய்

நிம்மதியற்ற தமிழனின் நிம்மதியான வாழ்க்கைக்கு வழிகோலச் சென்ற எமது மகனே, சகோதரனே மறு பிறப்பு நீ எடுத்து வரும்போது எமது மண் தமிழீழ மண்ணாக நிச்சயம் மாறிவிடும். அப்போது நீயும் எமது தமிழீழக் காற்றைச் சுவாசிப்பாயாக!

உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் யாவரும் 2. 2. 93 இன்று நடைபெறும் அந்தியேட்டிக் கிரியையிலும், மதியம் 12 00 மணிக்கு வீட்டில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பத்திரகாளி கோவில் வீதி,
பருத்தித்துறை. — குடும்பத்தினர்
(4177)

## ஓர் ஆண்டு நினைவலைகள்



## நிர்வாகிகள் தெரிவு

மண்கும்பான் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கான நடப்பாண்டு நிர்வாக சபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

உதவி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் சுந்தரலிங்கம், மண்கும்பான் கிராம சேவையாளர் குருமூர்த்தி ஆகியோரும் கலந்து கொண்ட பொதுக்கூட்டத்தில் தலைவராக செ. சிவலோகநாதனும், செயலாளராக கா. விவேகானந்தனும், பொருளாளராக மு. சுவாமிநாதனும் தெரிவு செய்யப்பட்டனர். மற்றும் உத்தியோகத்தர்களும் செயற்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டதுடன், காப்பாளராக வேலணை உதவி அரசாங்க அதிபர் இளங்கோவும் கணக்குப் பரிசோதகராக இ. பத்மநாதனும் தெரிவாகினர்.

★ ★ ★

நெல்லியடி கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழக புதுவருட நிர்வாகிகள் தெரிவு அண்மையில் இடம்பெற்றது இதில் தலைவராக கே செல்வராஜாவும் செயலாளராக கே. முருகவேளும், பொருளாளராக என். இலட்சுமிகாந்தனும் தெரிவு செய்யப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களும், மற்றும் உத்தியோகத்தர்களும் தெரிவாகினர்.

## பாடசாலை பெயர் மாற்ற கோரிக்கை


(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்திச்சபை பாடசாலையின் பெயரை ''பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி'' என மாற்றப்படவேண்டும என கல்வி அமைச்சரையும், கல்வித் திணைக்களத்தையும் கோரியுள்ளது. இப்பாடசாலையின் அபிவிருத்திச்சபை பாடசாலை மண்டபத்தில் அதிபர் திருமதி லீலா சந்திரசேகரம் தலைமையில் கூடியபோதே பாடசாலையின் பெயரை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என மாற்ற வேண்டும் எனக் கல்வி அமைச்சரையும், கல்வித் திணைக்களத்தையும் கோரவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [25]

## மாட்டு வண்டியிலிருந்து விழுந்தவர் மரணம்

மாட்டு வண்டியை ஓட்டிச்

## 4-ம் ஆண்டு கண்ணீர் அஞ்சலி



### அமரர் சி. ஜெகநாதன்

(87–88 கல்வியாண்டு விஞ்ஞானபீட மாணவன்)
யாழ் வளாகம்

தாயின் மடியில்
19-11-1966

அன்னியர் அழிப்பில்
2-2-1989

"உரிமை இழந்து வாழ மறுத்த நீ
உரிமைப்போரில் உயிர்நீத்தாய்".

-நண்பர்கள்
விஞ்ஞானபீடம்
யாழ் வளாகம்.

(4178)

---

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை

## அபிவிருத்திச் சபை கேள்வி அறிவித்தல்

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை அபிவிருத்திச் சபையின் சைக்கிள் பாதுகாப்பு நிலையம் 1-03-93 முதல் ஒருவருட காலத்திற்குக் குத்தகைக்கு விடப்படும். குறைந்த தொகை மாதாந்தம் 8500 ரூபா. அபிவிருத்திச் சபையின் பெயரில் சீட்டுக்கள் வழங்கப்பட வேண்டும். கேள்விப் படிவப்பணம் 100 ரூபா. வைத்தியசாலைப் பணிமனையில் பெறப்படும் படிவத்தில் 10-2-93க்கு முன்னர் விண்ணப்பிக்கவும். வைத்தியசாலை அபிவிருத்திச்சபை செயற்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை
தலைவர்

கே. வி. செல்வராஜன்
செயலாளர்

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை
அபிவிருத்திச்சபை.

(4197)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

பருத்தித்துறை. (4177)

## ஓர் ஆண்டு நினைவலைகள்



### நாகமுத்து முத்தையா

(நிகர வீதி சங்கானை)

தோற்றம்: 11 - 06 - 1902

மறைவு: 02 - 02 - 1992

மக்கள் ஐந்தைப் பெற்றாய் அம்மா
மருமக்கள் ஐந்தையும் கண்டாய் அம்மா.
அமைதி வாழ்வையும் தந்த இறைவன்
நீண்ட ஆயுளும் தந்தான் அம்மா.
பேரனோடு பீட்டனும் கண்டாய் அம்மா.
இறைவனோடு இரண்டறக் கலந்தாய் அம்மா
இறைஞ்சியே எந்நாளும் நினைப்போம் அம்மா.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பீட்டப்பிள்ளைகள்.

மு நடராசா
நிகர வீதி,
சங்கானை.

(4169)

சாலையின் பெயரை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என மாற்ற வேண்டும் எனக் கல்வி அமைச்சரையும், கல்வித் திணைக்களத்தையும் கோரவேண்டும் என்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [25]

### மாட்டு வண்டியிலிருந்து விழுந்தவர் மரணம்

மாட்டு வண்டியை ஓட்டிச் சென்று கொண்டிருந்த வயோதிபர் வண்டியிலிருந்து தவறி கீழே விழுந்த போது வண்டிச் சக்கரம் இவர் மீது ஏறியதில் உடல் நசிபட்டு மரணமடைந்தார். நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு இவ்விபத்து நடைபெற்றது.

கோப்பாய் தெற்கு இருபாலையைச் சேர்ந்த சுமார் 65 வயது மதிக்கத்தக்க நாகமுத்து வேலுப்பிள்ளை என்ற வயோதிபர் தனது வண்டியில் சென்று கொண்டிருக்கும் போதே இவ்விபத்து நடைபெற்றது.

### ஹோமியோபதி டிப்புளோமா பட்டமளிப்பு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச திறந்த வெளிப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு நிகழ்வு நேற்று காலை 10.00 மணியளவில் யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்றுள்ளது.

டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஹோமியோபதி டிப்புளோமாபட்டம் 41 பேருக்கும், அக்கு. பஞ்சர் டிப்ளோமா பட்டம் 20 பேருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ணப்பிக்கவும். வைத்தியசாலை அபிவிருத்திச்சபை செயற்குழுவின் முடிவே இறுதியானதாகும்.

டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை
தலைவர்


கே. வி. செல்வராஜன்
செயலாளர்

பருத்தித்துறை ஆதாரவைத்தியசாலை
அபிவிருத்திச்சபை.

(4197)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில்: 1966 – 12 – 11



விண்ணில்: 1993 – 1 – 2

அமரர்

### சு. நித்தியானந்தன் [இராசா]

(எஸ். எஸ். எஸ் மினிபஸ் உரிமையாளர்)

இனிய எங்கள் நண்பனே!
இன்றுடன் உனையிழந்து ஒருதிங்கள்
முடிகிறது — கீனாவியிலே
ஆழமாம் ஆழியிலே அணைந்த ஒளிவிளக்கே!
உன் நாமம் என்றும் வாழும்.
அமரர் உலகில் அல்லல் அற்று நீ வாழ
இறைபாதம் இறைஞ்சுகிறோம்.

பூநகரி மினிபஸ் சங்க
நண்பர்கள்

தெற்புலவு,
பூநகரி.
(4184)

## சிந்தனைக்கு

உண்மையில் சிறந்தோர் கூறும் செய்தி, குறிப்பிட்ட ஒரு நாட்டுக்குள் அடங்கக் கூடியதல்ல. உலகம் அனைத்திற்கும் அது உரியது.

— ஜவகர்லால் நேரு

ஈழநாதம்

01, மகநந்திராவீதி, யாழ்ப்பாணம் - 02 - 02 - 1993
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2023
ஈ. பெ. எண் - 05

# தென்னாபிரிக்காவை பின்பற்றி...

யாழ். குடாநாட்டிற்குள் பத்து லட்சம் மக்களை சிறை வைத்திருப்பது போன்று அடைத்து வைத்திருப்பதும், அவர்களின் போக்குவரத்திற்குத் தடை விதித்திருப்பதுமான செயல் ஒரு மனித விரோத செயலின் உச்சநிலை என்று மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு யோசப் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா அரசாங்கம் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான தரை வழிகளைத் துண்டித்திருப்பதும், கடல் மார்க்கங்களில் பயணம் செய்யத் தடை விதித்திருப்பதும், விடுதலைப்புலிகளுக்கு எதிரான நடவடிக்கை எனக்கூறுவது எந்த விதத்திலும் ஏற்புடையதல்ல. இத் தடைவிதிப்புக்களினால் விடுதலைப்புலிகளுக்கு சிறு சிரமங்கள் ஏற்படலாமேஒழிய விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளை அவை பாதிக்கப் போவதில்லை.

மாறாக, அப்பாவித் தமிழ்மக்களே இதனால் பெரும் துன்பம் அனுபவிக்கின்றனர். கடற்பரப்பில் பலர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். பலர் காணாமற் போயுள்ளனர். யாழ். குடா நாட்டிற்கான விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதினால், அத்தியாவசியப் பொருள்களின் விலை முன்னரை விடப் பல மடங்கு அதிகரித்துள்ளது. பல பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடும் நிலவுகின்றது.

இந்நிலையில், அரசாங்கத்தின் இச்செயலை விடுதலைப்புலிகளுக்கு எதிரான செயல் என்று கூறுவது என்ன நியாயம்? இது தமிழ் மக்களுக்கு எதிரான, அவர்களின் உரிமைகளை மறுக்கும் திட்டமிட்ட செயலாகும். இதனைத் தமிழ் இனத்திற்கு எதிராக விடுக்கப்பட்ட இன ஒடுக்கு முறையின் ஓர் உயர் வடிவம் என்றே கூறலாம்.

ஓர் இன மக்களை ஒரு பகுதிக்குள் முடக்கி வைத்து, அவர்களின் நடமாட்டத்தைக் கட்டுப்பண்ணுவதென்பது கடந்தகாலத்தில் தென்னாபிரிக்காவில் இனவெறி வெள்ளையர் ஆட்சியிலேயே இடம் பெற்று வந்தது. தற்பொழுது அங்கும் இந் நிறவெறிக் கொள்கை படிப்படியாகக் கைவிடப்பட்டு மக்களின் நடமாட்டத்திற்குச் சுதந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஆனால், சிங்களப் பேரினவாத அரசாங்கம் தற்பொழுது, கடந்தகால வெள்ளை இனவெறி அரசுகளை ஞாபகப்படுத்துவது போன்று நடந்து கொள்கின்றது.

சிங்களப் பேரினவாதத்தின் இச்செயலானது கண்டனத்திற்குரியது; ஆனால், சிங்கள அரசாங்கம் இந் நிலையைத் தொடர நினைப்பது மிகவும் பயங்கரமான விளைவுகளையே ஏற்படுத்தும். ஒருபுறம், மக்கள் கடும் துன்பங்களையும் துயரங்களையும் சந்திக்க வேண்டிய நிலை உருவாகலாம். ஆனால், இதன் விளைவுகள் சிங்கள அரசு கருதுவது போல் இருக்காது. அதாவது இனப்பிரச்சினைக்கு இவ் ஒடுக்குமுறை மூலம் தீர்வு ஏற்பட்டுவிடும், தமிழர்கள் பணிந்து வந்து விடுவார்கள் என சிங்கள அரசு கருதினால் தோல்வியே காணும்.

உலகில் நடந்த தேசிய இனங்களின் விடுதலைப் போராட்டங்கள் எதிரியின் படுகொலைகளால் சிறிது காலம் தாழ்த்தப்பட்டிருக்கலாமே ஒழிய முற்றாக அவை தோற்கடிக்கப்பட்டு, வேரறுக்கப்பட்டதாக இல்லை. போராட்டங்களின்போது ஏற்பட்ட தோல்விகள் தற்காலிக தோல்விகளே ஒழிய நிரந்தரத் தோல்விகளாக அவை இருக்கவில்லை.

மன்னார் ஆயர் அதி. வண. இராயப்பு யோசப் அவர்களும் இதனைத் தெளிவாகவே கூறியுள்ளார். "வடக்கு - கிழக்கு யுத்தத்தினால் சிந்தப்படும் இரத்தம் முழு நாட்டிற்குமே ஆபத்தை ஏற்படுத்தும் என்பதை அரசு உணரவேண்டும். யுத்தம் அதன்போக்கில் நீடிக்கும் பட்சத்தில் சிங்கள-தமிழ் இனங்களுக்கிடையில், சந்தேகச்சூழ்நிலை வளர்ச்சி கண்டுபதற்றம் ஏற்பட்டு நாடு பெரும்பாதிப்புக்கு உள்ளாகும்" என்பதே அதுவாகும்.

## கடல் ஏரியில் கண்ணி வெடி

[கொழும்பு]

சிறிலங்கா இராணுவம் யாழ். கடல் நீரேரியில் சங்குப்பிட்டிக்குக் கிழக்கே அறுபத்தி ஐந்து கிலோ கிராம் நிறையுடைய கடற் கண்ணிவெடியைக் கண்டுபிடித்துள்ளது என சிறிலங்கா இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இக் கண்ணிவெடி உடனடியாக வெடிக்கக் கூடிய முறையில் செய்யப்பட்டிருப்பதாகவும் கூட்டுப்படைகள் தலைமை அலுவலகத்தைச் சேர்ந்த பிரிகேடியர் இல்கமன தெரிவித்துள்ளார். இதனைப் போன்ற ஒருகண்ணிவெடியை ஏற்கனவே கடற்படையினர் கைப்பற்றியிருந்தனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## நெடுமாறன் பிணையில் விடுதலை

(தமிழ்நாடு)

விடுதலைப்புலிகளுக்கு ஆதரவாக தமிழ் நாட்டில் செயல்பட்டார் என்கின்ற குற்றச்சாட்டில் தமிழ்நாட்டுப்பொலிசாரினால் தடா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறன் நேற்று பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் உள்ள சிறப்பு நீதிமன்றம் இவரைநிபந்தனையுடன் கூடிய பிணையிலேயே விடுதலை செய்துள்ளது. கடந்த மாதம் 27 ஆம் திகதியன்று இவர் மதுரையில்கைது செய்யப்பட்டார்.

## கூட்டம்

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் அரச கணக்காளர்களின் மாசி மாதத்தின் கூட்டம் யாழ். செயலக மாநாட்டு மண்டபத்தில் இன்று பி. ப. 2-00 மணிக்கு பிரதம கணக்காளர் திரு. எஸ். சிவபாலன் அவர்களின் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் புதிய சம்பளத்திட்டத்தினைச் செயற்படுத்தல் பற்றியும், மற்றும் பயணச்செலவுக் கோரிக்கை பற்றியும் விரிவாகக் கலந்துரையாடித் தீர்மானிக்கப்பட்டுள்ளது. என யாழ். செயலக பூனர்வாழ்வுப் பிரிவு கணக்காளர் அறிவித்துள்ளார்.

## குடியிருப்புகள்

காலை 3.00 மணி முதல் 5 00 மணி வரை நடைபெற்றது.

மேற்படி இராணுவ நிலைகளிலிருந்து குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஏவிவிடப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல்கள் குடியிருப்புக்கள் மீது விழுந்து வெடித்ததையடுத்து அப்பகுதி சில மணி நேரம் அதிர்ந்தது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவும் அப்பகுதிகளை நோக்கி ஆட்லறி ஷெல்கள் ஏவி விடப்பட்டன. இதையடுத்து செம்பியன்பற்று, தாளையடி, ஆழியவளை, மருதங்கேணிப் பகுதி மக்கள் நாகர் கோவில், குடத்தனை, அம்பன் பகுதிகளை நோக்கி குடிபெயர நேரிட்டது.

இதே வேளை தாளையடி, ஆழியவளை, செம்பியன்பற்று கடற்பரப்பில் ரோந்து செல்லும் கடற்படையினரும் குடியிருப்புக்கள் மீதும், கடலில் தொழிலில் ஈடுபட்டுவரும் மீனவர்கள் மீதும் 50 கலிபர் பீரங்கித் தாக்குதலைமேற்கொண்டு வருகின்றனர்.

இப் பகுதியில் குண்டுவீச்சு விமானங்கள், உலங்குவானூர்திகளின் நடமாட்டங்களும் காணப்பட்டன. [யோ]

## 40 குடும்பங்கள்

படைநடவடிக்கைகள் முற்றுப்பெற்று விட்டதாக ஓர் இராணுவ அதிகாரி தெரிவித்ததாக ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன.

இதே வேளை செட்டிகுளத்திலிருந்து முசலிகுத்தி வரை தேடுதல் நடத்தப்பட்டு வருவதாக சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களின் வேறொரு செய்தி தெரிவிக்கிறது.

# இலக்கிய பேரவையின் பரிசுபெறுவோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண இலக்கிய வட்டம் - இலக்கியபேரவை 1989/1990-ம் ஆண்டுகளில் வெளிவந்த இலக்கிய ஆக்கங்களில் பின்வருவனவற்றைப் பரிசிற்கு உரியவையாக தெரிவு செய்துள்ளது.

பரிசும் விருதும் பெறுபவை:-

இலக்கிய ஆராய்ச்சி - "ஈழத்து இசை நாடக வரலாறு"- காரை. செ. சுந்தரம்பிள்ளை, நாவல் - "நம்பிக்கைகள்"- நந்தி, சிறுகதை- "ஒரு நாளில் மறைந்தஇரு மாலைப் பொழுதுகள்" - சுதாராஜ், கவிதை- "எனது இராகங்கள்"- வவுனியா திலீபன், சிறுவர் இலக்கியம்- "இராவணன் கோட்டை" - கே. எஸ். ஆனந்தன், நாடகம் - "மாருதப்புரவல்லி" - சொக்கன், சமயம்- "அருளப்பர் அம்மானை" -பா. சத்தியசீலன், அறிவியல்- "தாயாகப்போகும் உங்களுக்கு" - டாக்டர் எம். கே. முருகானந்தன்பாராட்டு சான்றிதழ் பெறுபவர்கள்:-

இலக்கிய ஆராய்ச்சி - "பண்பாட்டின் மூன்று கோலங்கள்" - கலாகேசரி ஆ. தம்பித்துரை நாவல் - "டானியல் குறுநாவல்கள்" கே. டானியல் "ஒரு தந்தையின் கதை"- அன்புமணி, "பொற்சிறையில் வாழும் புனிதர்கள்"- தெணியான், "கானகத்தின் கானம்" - செம்பியன் செல்வன் "மண்ணில் தாகம்" - செங்கை ஆழியான், சிறுகதைகள்- "தகவம் பரிசுக்கதைகள், "கிராமத்து மண்கள் சிவக்கின்றன" - சித்திரா நாகநாதன்.

# வாழ் நாளிலேயே மிக மோசமான பயணம்

(கொழும்பு)

கடந்த வாரம ஆஸ்திரியாவில் எல்லையைக் கடப்பதற்காக அடைக்கப்பட்ட கொள்கலனில் கொண்டு செல்லப்பட்டபோது மரணமடைந்தவர் பற்றிய சில விபரங்கள் தெரியவந்துள்ளன.

"தனது வாழ்நாளில் மிகத் துர்அதிஷ்டமானதும் மகா மோசமானதுமான பயணம்" என்ற குறிப்பு இறந்த ஒருவரின் நாட்குறிப்புப் புத்தகத்தில் காணப்பட்டது. மற்றொருவர் இத்தாலிக்கான பயணத்துக்காக 2 லட்சம் ரூபா செலுத்தியதற்கான ஆதாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஐந்து பேரிடமும் பணம் பறித்த முகவரைத் தேடிப் பொலிசார் அவரது முகவரி உள்ள வீட்டுக்குச் சென்றபோது அவர் நீண்ட நாட்களுக்கு முன்னரே வீட்டை காலி செய்தமை தெரியவந்தது

## பரிசில் வழங்கல் விழா

[யாழ்ப்பாணம்]

நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை பரிசில் வழங்கல் விழா நாளை புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு பாடசாலை அதிபர் சீ. வைகுந்தசாமி தலைமையில்பாடசாலை விடிவெள்ளி அரங்கில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளன.

## எழுதுமட்டுவாள்

பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் படுகாயமடைந்தனர். இவர்களது வீடுகளும் சேதமடைந்தன. இச்சம்பவத்தால் இளையதம்பி இராசையா [வயது 65], இராசையா லக்சுமிப்பிள்ளை[வயது 56], இராசையா யோகேஸ்வரி [வயது 25] மற்றும் அயலவரான மாணிக்கம் கனகமணி [வயது 51] என்பவருமே காயமடைந்தவர்களாவர். இவர்கள் அனைவரும் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து காலை 6. 15 மணியளவில் ஆனையிறவு, இயக்கச்சி சிறிலங்கா இராணுவ முகாம்களிலிருந்து ஒட்டுவெளி பகுதியை நோக்கி தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இந்த எறிகணைகள் ஒட்டுவெளி பகுதியில் வீழ்ந்து வெடித்ததில் கந்தசாமி குலேந்திரராணி (வயது 24) என்பவர் பலியானார். முருகேசு கந்தசாமி (வயது 54), கந்தசாமி பொன்னம்மா (வயது 48), கந்தசாமி புலேந்திரமலர் (வயது 26), கந்தசாமி புலேந்திரகுமார் (வயது 14) மற்றும் எஸ். காந்தன் ஆகியோர் படுகாயமடைந்தனர்.

தொடர்ந்து மீண்டும் குண்டுவீச்சு விமானங்கள் காலை 7. 00 மணிக்கு கிளாலி, எழுதுமட்டுவாள் வீதியில் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்திய அதேவேளை றொக்கற் தாக்குதல்களையும் நடத்தின.

விமானங்கள் இப்பகுதியில் வீசிய இரண்டு குண்டுகளினால் ஒரு வீடு சிறிது சேதமடைந்தது. தொடர்ந்து கிளாலி கடற்பகுதியை அண்டியும் பல குண்டுகள் வீசப்பட்டன. இவற்றால் ஏற்பட்ட சேதவிபரங்கள் தெரியவில்லை.

## எம். எஸ். சம்பந்தர் காலமானார்

(சென்னை)

திராவிடர் கழக முன்னணிப் பிரமுகர் எம். எஸ். சம்பந்தர் நேற்று சென்னையில் காலமானார்.

திராவிட இயக்கத்தின் தந்தை பெரியாரின்நெருங்கிய சீடரான திரு. சம்பந்தர் பெரியார் சுய மரியாதை பிரசார இயக்கத்தின் துணைத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார். இவருக்கு வயது 67 ஆகும்.

## 'குமாரி' புறப்பட்டது

(வடமராட்சி)

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கி முடித்த 'குமாரி' கப்பல் நேற்று மாலை கொழும்பு நோக்கி புறப்பட்டது.

இக்கப்பலில் 85 தபால்பொதிகள் எடுத்துச் செல்லப்படுகின்றன. அத்துடன் யாழ். உணவுத் திணைக்கள கணக்காளர், கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் ஆகியோரும் இதில் பயணமாகி உள்ளனர்.

நாளை காலை 'குமண' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும். (யோ)

## வெளிநாட்டு

வது தெரிந்ததே. இவ்வாறு உடைக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்ட கடிதங்களினுள் தமது உறவினர்கள் கஷ்டங்களை சிறிது குறைக்கும் நோக்கத்துடன் வெளிநாட்டில் வசிப்பவர்களால் வைக்கப்பட்டிருந்த டாலர் நோட்டுகள் அபகரிக்கப்பட்டு அரசாங்கத்தின் கணக்கில் வைப்பில் இடப்பட்டுவருகிறது.

இவ்வாறு தபால்களிலிருந்து பெறப்பட்ட சுமார் இரண்டு இலட்சம் அமெரிக்க டாலர்கள் சென்றவாரம் போஸ்ட் மாஸ்டர் ஜெனரலால் அரசாங்க கணக்கில் வைப்பில் இடப்பட்டுள்ளது.

அரசாங்கம் இந்நடவடிக்கையை அவசரகாலச் சட்டத்தின்கீழ் மேற்கொள்வதாகக் கூறிக் கொள்கின்ற போதிலும் இது தனிமனித உரிமையை மீறி கள்ளத்தனமாக அபகரிக்கும் செயல் எனவும் தனி மனித அந்தரங்க உரிமையைப் பறித்தெடுக்கும் செயல் எனவும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

# இலவச பாடப் புத்தகம் விநியோகத்தில் பாரபட்சம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருக்கும் பின்தங்கிய மற்றும் கிராமப்புறபாடசாலைகளுக்கு இலவச பாடப் புத்தகங்களை விநியோகிப்பதில் யாழ்ப்பாண கல்வித் திணைக்களம் மாற் றாந்தாய் மனப்பான்மையை கடைப்பிடித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த மாதம் நடுப்பகுதி முதல் விநியோகிக்கப்பட்டு வரும் இலவச பாடப் புத்தகங் கள் நகரப்புற பாடசாலைகளுக் கும், முன்னணிப் பாடசாலை களுக்கும் தாராளமாக விநி யோகிக்கப்பட்டுள்ள அதே சமயம் பின்தங்கிய மற்றும் கிராமப்புற பாடசாலைக ளுக் கும் மிகக் குறைந்த அளவில் வழங்கப்பட்டிருப்பதாக பெற் றோரும், மாணவர்களும், ஆசிரியர்களும் புகார் கூறியுள் ளனர். பாடப் புத்தகங்கள் முழுமையாக வழங்கப்படாத துடன் சேதமடைந்த புத்தகங் களும் வழங்கப்பட்டிருக்கின்ற தாம்.

கல்வித் திணைக்களத்தின் இந்த நடவடிக்கையால் பின் தங்கிய மற்றும் கிராமப்புற பாடசாலைகளில் பயிலும் மாணவர்களின் கல்வி வளர்ச்சி மேலும் பாதிப்படைந்து போகும் சூழ்நிலை ஏற்பட்டுள் ளது. எனவும் கவலை தெரி விக்கப்பட்டுள்ளது.

இதேவேளை ஆசிரியர் நிய மனத்திலும் கூட தனிப்பட்ட செல்வாக்கு பிரயோகிக்க இட மளிக்கப்பட்டதாகவும் அதிபர் கள் சிலர் கூறியுள்ளனர். நக ரப்புறங்களை அண்டியுள்ள பாடசாலைகளுக்கும்வீட்டிற்கு அருகேயுள்ள பாடசாலை களுக்கும் ஆசிரியர் களுக்கு நியமனம் வழங்கப் பட்டிருக்கும் அதே சமயம் தொலைவிலுள்ள பாடசாலை களுக்கு நியமிக்கப்பட்ட ஆசி ரியர்கள் பின் வேறு பாடசா லைகளுக்கு இடம் மாற்றப் பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால் ஆசிரியர்கள் பற்றாக் குறை நிலவுவதால் தமது பாடசாலைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதாக பின் தங்கிய மற்றும் கிராமப்புற பாடசாலை அதிபர்கள் புகார் கூறுகின்றனர். நகரப்புற பாடசாலைகளின் சிறிதளவு வெற்றிடங்கள் கூட நிரப்பப் பட்டுள்ள அதே சமயம் பின் தங்கிய பாடசாலைகளின் பெரிய எண்ணிக்கையான ஆசிரிய வெற்றிடங்கள் கூட கவனத்திற்கு எடுக்கப்பட வில்லை எனவும், இதேபோன்று இலவச சீருடை விநியோகத் திலும் இடம் பெயர்ந்த மாணவர்கள் பாதிப்படையக் கூடிய நிலை உள்ளதாகவும் தெரியவருகின்றது. [நி]

## எரிபொருள் இன்மையால் லொறிச் சேவை தடங்கல்

[வடமராட்சி]

பருத்தித்துறை துறைமுகத் தில் கடலின் வரும் பொருள் களை ஏற்றிச் செல்லும் லொறிகள் எரிபொருள்கள் இன்மையால் நேற்று பிற்பகல் 2மணி வரை வீதிகளில் தரித்து நின் றன.

கப்பலில் இருந்து காலை பொருட்களை ஏற்றிய பல லொறிகள், பொருள்களை எடுத்துச் செல்வதற்கு தேவை யான எரிபொருள்கள் இல் லாததினால் பல மணி நேரம் வீதிகளில் தவம் கிடந்தன.

பின்னர் தனியார் லொறிச் சங்க செயலாளர் யாழ். புனர் வாழ்வுப் பிரிவு அலுவலகத்தில் செய்த முறைப்பாட்டை அடுத்து எரிபொருள்கள் வழங் கப்பட்டு 2 மணிக்குப் பின்னர் லொறிகள் பொருள்களை எடுத்துச் சென்றன. (யோ)

## ஆதாரம காட்டி பெறவும்

(யாழ்ப்பாணம்)

ஆறுகால்மடம் பகுதியில் மாஜறின் அடங்கிய பெட்டி ஒன்று சோ. குலசேகரம் என் பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

குண்டு

விழ்ந்து வெடித்தது. வீதியில் வீழ்ந்து வெடித்த எறிகணைச் சிதறல்கள் உடலுக்குள் புகுந் ததை உணர்ந்தேன் சில விநாடிகளில் நான் மயக்க முற்றேன். தற்போது மருத் துவ மனையில் எனது மகள் இறந்து விட்டதாகவும் மனை வியும் மற்றிரு பிள்ளைகளும் காயமடைந்து இங்கு அனு மதிக்கப்பட்டிருப்பதாகவும் அறிந்தேன் என்றார்.

உடலின்

வெளியே வந்தபோது இரண்டு விமானங்கள் எமது பகுதியை இலக்காகக் கொண்டு வேக மாக வலம்வருவதைக் கண் டேன்.

எமது பகுதியில் தாக்குதல் நடைபெற மாட்டாது எனக் கருதி அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த போது அதில் ஒரு விமானம் திடீரென எமது பகுதியை நோக்கி பாரிய இரைச்சலுடன் வந்துகொண்டிருந்ததை அவ தானித்ததும் அலறியவாறு முற்றத்தில் வீழ்ந்துபடுத்தேன். நான் படுத்த அதேவேளை எனது தாய், தந்தை, சகோ தரர்களும் அருகில் கிடந்ததை கண்டேன். சில விநாடிகளில் எமக்கு மிக சமீபமாக நின்ற மரத்திற்கூடாக அதை அண்டி ஒரு குண்டு வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தது.

அப்போது நிலத்திலிருந்து வீசப்பட்டது போன்ற ஒரு பிரமை ஏற்பட்டது. உடலின் பல பகுதிகளுடாகவும் சன்னங் கள் ஊடறுத்துச் சென்றதை உணர்ந்தேன். உடல் முழுவ தும் மண் ஒட்டியிருந்தது. அருகிலிருந்து அம்மாவின் முனகல் சத்தம் கேட்டது. தலையைத் தூக்கிப் பார்த்த போது அம்மா துடித்துக் கொண்டிருந்தார்

அவ்வேளை வீட்டின் பின் புறத்தில் பதுங்கியிருந்த சகோ தரி அலறியவாறு ஓடிவந்து அம்மாவைத் தூக்கினார். அம்மா இரத்தம் தோய்ந்த நிலையில் காணப்பட்டார். அப்பாவிற்கு காலில் காயம் பட்டதாக அறிகிறேன். ஏனைய சேதங்கள் தெரியாது சற்று நேரத்துக்குள் வந்த அயலவர்கள் எம்மை சாவகச் சேரி வைத்தியசாலைக்கு எடு த்துவந்தனர். பின் அங்கிருந்து யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டோம் என்றார்.

---

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

மாநகர சனசமூக நிலையங்களுக்கான

## அறிவித்தல்


யாழ்ப்பாண மாநகரசபையில் பதிவுசெய்யப்பட்ட 67 சனசமூக நிலையங்களில் இதுவரை 31 சனசமூக நிலை யங்களே நடப்பாண்டுக்கான நிர்வாக சபையினைத் தெரிவுசெய்து எமக்கு அறிவித்துள்ளன.

மீதியான 36 சனசமூகநிலையங்களும் உடனடியாக நடப்பாண்டு உத்தியோகத்தர்களைத் தெரிவு செய்து அத்தெரிவு பற்றிய விபரங்களை எதிர்வரும் 15-02-93-ம் திகதிக்கு முன்னர் எமக்கு அறியத்தந்து ஒத்துழைக்கு மாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மாநகர அலுவலகம், யாழ்ப்பாணம். 01-02-1993 — மாநகர ஆணையாளர், யாழ்ப்பாணம். (இ/5925)

---

## காணவில்லை



### திரு. ஆறுமுகம் இராமச்சந்திரன்

திரு. ஆறுமுகம் இரா மச்சந்திரன்(வயது 45)என்ப வரை கடந்த மூன்று மாதங் களாக காணவில்லை. இவர் மன நோயினால் பீடிக்கப் பட்டுள்ளார். இவர் மருதங் கேணி- செம்பியன் பற்றைப் பிறப்பிடமாகவும்,முல்லைத் தீவு-விஸ்வமடுவை வசிப்பிட மாகவும் கொண்டவர் இவர் கடைசியாக கறுப்பு நிற செக் சேட்டும், நீலமும், பச்சை யும் கலந்த சதுர கிப்லி சாரமும் அணிந்திருந்தார். விசேட அடையாளங்கள்: இவருடைய வலது காலின் சின்னவிரல் குதிக்கால் பக்கமாக சற்று விலகியுள்ளது. இவரைக் கண் டவர்கள் தயவு செய்து அருகில் உள்ள காவல் பணி மனைகளில் தெரிவிக்கவும்; அல்லது, மாவீரர் பணிமனை டிப்போச்சந்தி கிளிநொச்சி என்ற முகவரிக்குத் தெரி விக்கவும்; அல்லது கீழ்காணும் விலாசத்திற்கு தெரியப் படுத்தவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

திருமதி இராமச்சந்திரன் சரஸ்வதி
இல 12/2, விஸ்வமடு,
முல்லைத்தீவு. (4192)

தகவல்
மகன், விஜயகுமார்

---

# இலங்கை வங்கி யாழ்.கிளை மாலை 4.00 மணிவரை இயங்கும்

(யாழ்ப்பாணம்)

வாடிக்கையாளர்களின் நன்மைகருதி இலங்கை வங்கி மாலை 4.00 மணிவரை திறந் திருக்கும் என இலங்கை வங்கி பிரதான முகாமையாளர் அறி வித்துள்ளார்.

நேற்று முதல் யாழ் ஆஸ் பத்திரி வீதி இலங்கை வங்கி யில் 50,000 ரூபாவிற்கு மேற் பட்ட தொகையினை பொது மக்கள் வைப்பிலிடுவதற்கும் உண்டியல்கள், தபால் மாற்று, மற்றும் கண்டதும் கொடுப் பனவு ஆகிய கொடுக்கல் வாங் கல்களுக்காக வங்கி மாலை 4.00 மணிவரை திறந்திருக்கும்.

## திருப்பலி பூசை

[யாழ்ப்பாணம்]

யாழ். மறை மாவட்டத்தின் அழைப்பை ஏற்று தற்போது யாழ். விஜயம் மேற்கொண் டுள்ள மன்னார் மறை மாவட்ட ஆயர் பேரருட்திரு. இராயப்பு யோசப் அவர்க ளுக்கு வரவேற்பு நிகழ்ச்சியும், திருப்பலியும் நடைபெறவுள் ளது.

யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் வரும் ஞாயிற் றுக்கிழமை மாலை 4-15 மணிக்கு இந்நிகழ்வு நடை பெற உள்ளது. [நி]

## 4 வது ஆண்டு நினைவஞ்சலிக் கூட்டம்

மாணவர் உரிமைக்காக இந் திய இராணுவத்திற்கு எதி ரான போராட்டத்தில் 02-02-1989 அன்று மரணி த்த விஞ்ஞான பீட மாணவன் அமரர் சின்னத்தம்பி ஜெக நாதன் அவர்களின் 4-வது நினைவஞ்சலிக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு விஞ்ஞான பீடத்தில் கனக சபாபதி மண்டபத்தில் நடை பெறவுள்ளது.

## வீரச்சாவு



2-ம் லெப். கணையன்/ அசந்தன்

கடந்த 31-ம் திகதி வைத் தியசாலையில் சுகவீனம் கார ணமாக விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவ டைந்தார்.

வீரச்சாவடைந்த 2-ம் லெப். கணையன் (அசந்தன்) (செந்தில்வேல் ராஜ்குமார் வைந்தர் வீதி, திருமலை.) இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்

## உதவிப்பணம்

ஊர்காவற்றுறை பிரதேச செயலகப் பிரிவால் வழங்கப் படும் 1992 ஆம் ஆண்டு ஒக் டோபர், நவம்பர் மாதங்களுக் கான பொதுசன உதவிப்பணம் மேற்படி பிரிவுக் கிராமசேவை அலுவலர்கள்மூலம் வழங்கப் பட்டுவருவதாகத் தெரிவிக்கப் படுகிறது. [21]

---

# மரண அறிவித்தல்கள்

## சின்னையா நடராசா

இருபாலை பழைய வீதியைச் சேர்ந்த சின்னையா நடராசா (க.பொ. இரத்தினம், குஞ்சு), (மஸ்கன் கொம் பனி முன்னாள் சாரதி) காலமானார். இவர் மனோன் மணியின் அன்புக் கணவரும், மனோராணி (மல்லாகம்), வசந்தி (இத்தாலி) சாந்தி, மனோராஜன் (சவுதி), சுமதி (இத்தாலி), ரவிச்சந்திரன், சுதன், கவிதா ஆகியோரின் அருமைத் தந்தையும், நவரத்தினம் (இத்தாலி), அமுத லிங்கம் (சாரதி), ஜெயசீலன் ஆகியோரின் மாமனாரும், சுரேக்கா, மேனகா, சிந்து, சூட்டி, வேவி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரிகைகள் 02-02-93 செவ்வாய்க் கிழமை (இன்று) நண்பகல் 12 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின் றோம்.

பழைய வீதி,
இருபாலை,
கோப்பாய்.

தகவல்:
மகன்: ரவிச்சந்திரன் [ரவி]
[4204]

## திரு. இராமலிங்கம் இராசதுரை (இராசு)

கொக்குவிலைச் சேர்ந்த திரு. இராமலிங்கம் இராச துரை அவர்கள் 30-1-93 அன்று அகாலமரணமானார். இவர் மனோரஞ்சிதத்தின் அன்புக் கணவரும், ஜெய வாணி, ஆனந்தநாயகி, அரவிந்தன் (கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத்தந்தையும், காலம்சென்ற சண்முகலிங்கம் சுப்பிரமணியம், வடிவீஸ்வரியின் அன் புச் சகோதரனும், மன்மதன் (பிரான்ஸ்), ஜெகதீஸ் வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், குகதாசன் (பரந் தன் இரசாயனத் தொழிற்சாலை), குகேந்திரவதனி (கனடா), குகேந்திரன் (கொக்குவில் இந்துக்கல்லூரி) ஆகியோரின் சிறிய தகப்பனும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 2-2-93 முற்பகல் 10 30 மணி யளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கோம் பையன் மணல் மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஐயனார் கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
(4198)

தகவல்
இ. அரவிந்தன்
(மகன்)

---

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1993ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 02ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.